தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்மிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(உ) சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு 1982.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

6. அறிவிப்புகள் — தொடர்ச்சி.

(ஆ) பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையில் இன்று மூன்று மாண்புமிகு அமைச்சர்களுடைய மொத்தம் 10 மானியக் கோரிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பெற இருக்கின்றன. இவை தவிர ஒரு அரை மணி நேர விவாதம் எடுத்துக்கொள்ளப்பெற இருக்கிறது. எனவே இவற்றிற்கு கீழ்க்கண்டவாறு நேரம் ஒதுக்கப் பெறுகிறது :—

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் மானியக் கோரிக்கைகள்	காலை 10 மணி முதல் 1 மணி வரை.
அரை மணி நேர விவாதம்	பிற்பகல் 1 மணி முதல் $1\frac{1}{2}$ மணி வரை.
மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்களின் மானியக் கோரிக்கைகள்	பிற்பகல் 4 மணி முதல் 6 அல்லது $6\frac{1}{2}$ மணி வரை.
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் மானியக் கோரிகைகள்	பிற்பகல் 6 மணி அல்லது $6\frac{1}{2}$ மணி முதல் $7\frac{1}{2}$ அல்லது 8 மணி வரை.